## தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது உரிய செயற்பாட்டிற்காகப் பணம் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகளோ செலவின விபரங்களோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விளையாட்டுக் கழகங்கள் | கொடுப்பனவு விபரம் | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| காற்பந்துச் சம்மேளனம் | மஹிந்த ராஜபக்ஷ காற்பந்து போட்டி | 3,202,250 |
| இலங்கை ரக்பி காற்பந்துச் சங்கம் | சர்வதேச உடற்பயிற்சி ஆலோசகரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக | 1,250,000 |
| மற்போர் விளையாட்டுச் சங்கம் | விருந்துபசாரம் | 750,000 |

(ஆ) நிதியத்தின் மூலம் 2012 மார்ச் 14 ஆம் திகதிய இலங்கை வலைப்பந்து சங்கத்திற்கு ரூபா 800,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கான பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) விளையாட்டுக்கள் நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த பின்வரும் முற்பணங்களுக்கான முற்பணப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | முற்பணத் தொகை |
|---|---|
| | ரூபா |
| தேசத்திற்கு மகுடம் கரப்பந்தாட்ட போட்டி | 10,000 |
| தேசத்திற்கு மகுடம் சைக்கள் ஓட்டப் போட்டி | 20,000 |
| தேசத்திற்கு மகுடம் சைக்கள் ஓட்டப் போட்டி | 20,000 |

(ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டலின் பிரகாரம் விலைகள் கோரப்படாது 2012 திசெம்பர் 09 ஆம் திகதி ரூபா 164,000 பெறுமதியான 40 கிரிகட் ஜேசி கிட்கள் நிதியத்தால் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய கிரிகட் ஜேசிகள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கமும் உரிய பொருட்களை விநியோகிப்பதற்கு.். வழங்குவதற்கு உரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு இணையாக நடாத்தப்பட்ட கபடிப் போட்டிக்காக நிதியத்தின் மூலம் இலங்கை கபடி சம்மேளனத்திற்கு ரூபா 1,500,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் கபடி சம்மேளனக் கணக்கறிக்கைகளின் பிரகாரம் செலவிடப்பட்ட தொகை 1,025,000 ஆகக் காணப்பட்டது. எனினும், இதற்கு உரித்தான செலவின விபரங்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் எஞ்சிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சிக்கு 04 விளையாட்டுக் கழகங்களுக்காக ரூபா 1 மில்லியன் படி வழங்கப்பட்டிருந்தது. அப் பணத்தை வழங்குகையில் இதற்கான செலவின மதிப்பீடு உரிய சங்கங்களிலிருந்தும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்தும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய செயற்பாட்டிற்காக பணம் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகளோ அல்லது செலவின விபரத்தையோ பெற்றிருக்கவில்லை.

**1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்ற பின் கூடியளவு விரைவாக நிதியத்தின் நிர்வாகம் குறித்த அறிக்கை அமைச்சுச் செயலாளரால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 19,923,798 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,104,303 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 9,156,061 ஆல் அதிகரித்து செலவினம் ரூபா 9,663,434 தொகையால் குறைவடைந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகளில் ரூபா 18,819,495 ஆல் அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

இலங்கை விளையாட்டுக்களுக்கு தைரியமூட்டுதல், முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிதியத்தின் முக்கிய நோக்கான போதிலும் இதற்காக கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. விளையாட்டுச் சமூகங்களாலும் தனிநபர்களாலும் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் ஏதேனும் பணத்தை வழங்குவதற்கு மாத்திரம் தற்போது நிதியச செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

வருடம் முழுதும் ரூபா 03 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை ஆக்கபூர்வமான முதலீட்டு மார்க்கத்தில முதலீடு செய்யப்படாது நடைமுறைக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டுக்கள் நிதியத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2011 திசெம்பர் 20 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் திருத்திய பாதீடு 2012 திசெம்பர் 28 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதீடு தயாரிக்கப்படுகையில் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சிக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) நிதிப் பயன்பாடு